


ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகுலோத்துங்க என்று ஆரம்பித்து, மன்னர் வருகிற விஷயத்துக்கு இரண்டு மைல் நீள முன்னுரை வழங்கும் கலாசாரமெல்லாம் நம் ஊரில்தான். மன்னரெல்லாம் மலையேறிப் போய் மந்திரிகளும் காலாவதியாகி, அமைச்சர்களே வந்துவிட்ட பிறகும், மேற்படி இரண்டு மைல் சமாசாரம் ஏதோ ஒரு வடிவத்தில் இருக்கத்தான் செய்கிறது.

புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவில் அதிரடி மன்னர் பரம்பரை ஆட்சிதான் என்றாலும், இந்தக் கித்தாப்புகளெல்லாம் கொஞ்சம் குறைச்சல்தான். பாருங்கள், எத்தனை சாதாரணமாக ஒரே ஒரு மெய்க்காப்பாளனை ஒத்தாசைக்குக் கூப்பிட்டுக்கொண்டு மாமன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் ஹாயாக வெளியே கிளம்பிப் போகிறார்!

ஜார் வம்சத்து ஜாங்கிரி அவர். பார்ப்பதற்கு சும்மா தளதளவென்று ஜம்மென்று இருப்பார். அந்த மீசை ஒன்று போதும். அசப்பில் சந்தன வீரப்பனுக்கு ஒன்றுவிட்ட சித்தப்பா போலத் தோன்றினாலும், அக்கால ரஷ்யாவில் அது ஓர் அபூர்வ மீசை. மழுங்கச் சிரைத்த மன்னர் வம்சத்தில் அவர் ஒரு மாறுபட்ட குலக்கொழுந்து. அன்பை அந்தப்புரத்திலும் ஆசையை அரியணை மீதும் அதிகாரத்தை மக்களிடத்திலும் வைத்த சர்வாதிகார சிரோன்மணி. அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் அடிப்பொடிகளும் மன்னர் எப்போது என்ன செய்வார், யார் தலையை எதற்காகச் சீவுவார் என்று தெரியாமல், எப்போதும் உயிரை எடுத்து இடுப்பில் முடிந்துகொண்டபடிதான் சபைக்கு வருவார்கள். எதிர்த்து ஒரு கேள்வி? ஒரு கருத்து மாறுபாடு? அட, ஒரு சின்ன விவாதம்?

ம்ஹூம். சர்வாதிகாரிகள் இதையெல்லாம் விரும்புவதில்லை. சொன்னால் செய்யவேண்டும். சொன்னதைச் செய்யவேண்டும். குடிபடைகள் இருப்பது அதற்குத்தானே?

ஆகவே, மக்களில் மைனாரிடிகள் கோபம் கொண்டார்கள். ஏதாவது செய்யவேண்டும். சகிக்க முடியவில்லை. ஆட்சி மாறவேண்டும். ஆளாவது மாறவேண்டும். மக்களாட்சி வரத் தாமதமானாலும் இந்த மன்னனை ஒழித்துக்கட்டினால் கொஞ்சம் தாற்காலிக நிம்மதியாவது வரும். தவிரவும் இது ஜார் வம்சத்தவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் இருக்கும். மக்கள் முட்டாள்களல்லர். குறைந்தபட்சம் எப்போதும் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள். ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

மன்னரை ஒழிக்கும் யோசனை அன்று பலபேருக்கு இருந்தது உண்மை. ஆனால், யார் யோசிப்பதோடு ரிடையர் ஆகப்போகிறார்கள், யார் செயல்படுத்திப் பார்க்கப் போகிறார்கள், எப்படிச் செய்யப்போகிறார்கள், வெற்றி கிடைக்குமா, வீரமரணம் மட்டும்தானா என்பதெல்லாம் எல்லோருக்குமே சஸ்பென்ஸாகத்தான் இருந்தது.

இப்படி யோசித்துக்கொண்டிருந்த கோஷ்டிகளுள் ஒன்று Narodnaya Volya. இந்தப் பெயரையெல்லாம் தமிழில் எழுதிக் கொலை செய்யவேண்டாம். அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். என்ன அர்த்தம் என்றால், மக்கள் சக்தி. ஒரு புரட்சிகர இயக்கத்துக்கு இதைவிடப் பொருத்தமான பெயர் கிடைத்துவிடுமா என்ன?

1879 ஆகஸ்டு மாதம் தோன்றிய இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம், உழுபவர்களுக்கு நில உரிமை பெற்றுத்தர வேண்டும் என்பதுதான். என்ன உரிமை, மண்ணாங்கட்டி, புடலங்காய்! ஜார் காலத்து ரஷ்யாவில், நிலமெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமானதுதான். உழுதால் கூலி. அழுதால் உதை.. அதற்குமேல் எதுவும் கிடையாது. மன்னர்தான் பண்ணையார். கொஞ்சம் ஜம்போ சைஸ் பண்ணையார் என்று சொல்லவேண்டும். மக்களுக்குச் சேவை செய்யவே முடிதரித்தேன் என்றெல்லாம், அவர் அநாவசியத்துக்கு ஸ்டேட்மெண்ட் விட்டுக்கொண்டிருக்கிற ஜாதி இல்லை. மக்கள் தனக்குச் சேவை செய்யவே பிறந்தார்கள் என்று ஆத்மசுத்தியுடன் நினைத்துக்கொண்டிருந்தவர்.

ஆகவே, Narodnaya Volya இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், இந்த ஜாரை ஒழித்துவிட முடிவு செய்தார்கள். மொத்தம் சுமார் ஐம்பது பேர் கொண்ட குழு அது.

ஆரம்பத்தில் அமைதியான முறையில் நீதி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவே உத்தேசித்திருந்தார்கள். ஊர்வலம், பொதுக்கூட்டம், உண்ணாவிரதம் போன்றவையெல்லாம் சர்வாதிகார ஆட்சியில் கெட்டகாரியங்கள் என்பதால், என்ன செய்து மன்னரைத் தட்டிக்கேட்கலாம் என்பது புரியவில்லை. வீதிக்கு வந்து ஒரு சின்ன சப்தம் போட்டால் கூட, குதிரை வீரர்கள் வந்து கப்பென்று பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். சரி, உனக்குப் புரிந்த பாஷையிலேயே பேசுகிறேன் என்று முடிவு செய்ததன் விளைவுதான் மன்னரைக் கொல்ல எடுத்த முடிவு.

நாட்டுத் துப்பாக்கிகளும் கையெறி குண்டுகளும் புழக்கத்துக்கு வந்துவிட்ட காலம் அது. ஜெலட்டின் குச்சிகளைக் கொண்டு பாறைகளை மட்டும்தான் உடைக்க முடியுமென்பதில்லை; தேவையில்லாத சில ஜீவாத்மாக்களுக்கும் பரலோகப் பிராப்தியளிக்கலாம் என்று சிந்தனைச் சிற்பிகள் யோசித்துக் கண்டுபிடித்து விட்டிருந்தார்கள்.

ஆகவே, மேற்படி Narodnaya Volya வினர் தமது திட்டத்துக்குத் தேவையான குண்டுகள், ஜெலட்டின் குச்சிகள், துப்பாக்கிகளை வாங்கிச் சேகரித்துவிட்டு தக்க தருணத்துக்காகக் காத்திருந்தார்கள்.

அவர்கள் களத்தில் இறங்குவதற்கு முன்னரே, இரண்டு முறை மன்னர் மீதான கொலை முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. பீட்டர்ஸ்பர்க்கில் ஓர் ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்து, சொற்பொழிவாற்றித் திரும்பிய மன்னரைச் சுட்டுக்கொல்ல யாரோ முயற்சி செய்தார்கள். தப்பித்துவிட்டார். அடுத்த முறை ஓர் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சியின்போது அலெக்சாண்டர் ஸோலொவிவ் என்கிற முப்பத்துமூன்று வயது புரட்சிக்காரன் நேருக்கு நேர் சுட்டுக்கொல்ல முடிவு செய்து வரிசையில் நின்றிருக்க, அவன் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து துப்பாக்கியை எடுப்பதைப் பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார் மன்னர் பெருமான். ஆகவே, அம்முறையும் தப்பித்தார்.

மூன்றாவது சந்தர்ப்பத்தில்தான் Narodnaya Volya குழுவினர் ஆரம்பிக்கிறார்கள். மன்னர் எங்கோ கோடைவாசஸ்தலத்துக்குப் போய்விட்டு, லிவாடியா என்னும் இடத்திலிருந்து மாஸ்கோவுக்கு ரயிலில் திரும்புகிறார் என்று கேள்விப்பட்டு ரயில்பாதையில் குண்டு வைத்துவிட்டுக் காத்திருந்தார்கள்.

ரயில் வந்ததே தவிர, ஜார் வரவில்லை. அவர் ஆயுசு கெட்டி. அதற்கு என்ன செய்வது?

தமது அடுத்த முயற்சியை இன்னும் பலமாகத் திட்டமிட்டார்கள். பிப்ரவரி 5, 1880 அன்று மன்னரின் அரண்மனைக்குள்ளேயே திருட்டுத்தனமாக நுழைந்து, அவரது சாப்பாட்டு அறையில் குண்டு வைத்தார்கள். அன்றைக்குப் பார்த்து மன்னருக்கு வயிறு உப்புசமாகப் போய்விட, 'எனக்கு விருந்து வேண்டாம், ஒரு தம்ளர் பால் மட்டும் போதும்' என்று சிப்பந்தியிடம் சொல்லி அனுப்பிவிட்டு, அந்தப்புரத்திலேயே இருந்துவிட்டார். அந்தக் குண்டு அநாவசியமாக வெடித்து சில மேசை, நாற்காலிகளை மட்டும் சேதப்படுத்தியது.

இத்தனை முயற்சிகள் நடந்திருக்கின்றன; ஒரு பதற்றம் வேண்டாமோ? பயம் வேண்டாமோ? ம்ஹூம். சர்வாதிகாரி என்றாலும் கொஞ்சம் தத்திதான். சந்தேகமில்லை.

இல்லாவிட்டால், தனது குளிர்கால அரண்மனையிலிருந்து எவ்விதக் கூடுதல் பாதுகாப்புமில்லாமல் ஒரே ஒரு மெய்க்காப்பாளருடன் வண்டி ஏறி, தனியே வெளியே புறப்படுவாரா மன்னர்?

அது நடந்தது மார்ச் 1, 1881-ம் ஆண்டு. எப்படியும் இன்றைக்கு மன்னரைக் கொன்றே தீருவது என்று முடிவு செய்து, ஒன்றுக்கு நாலு பேராக ஆயுதம் ஏந்தி, ஆளுக்கொரு வீதியில் காத்திருந்தார்கள். ஒரு வழியில் மன்னர் தப்பித்தால், இன்னொரு வழியில் மாட்டுவார். அங்கே தப்பித்தால் அடுத்ததில். அங்கும் தப்பித்தால் இன்னொன்றில். நாலு பேரிடமிருந்தும் தப்பித்துவிட்டால், வேறு வழியே இல்லை. சர்வாதிகாரம், சரணம், சரணம்.

ஒரு தீர்மானத்துடன்தான் அவர்கள் அங்கே காத்திருந்தார்கள். பீட்டர்ஸ்பர்க் அரண்மனையை விட்டுப் புறப்பட்ட மன்னரின் வாகனம், சில நூறு அடிகள் தாண்டி ஒரு பிரதான சாலையை அடைந்தபோது, புரட்சிக் குழுவின் முதல் வீரன் மன்னரின் வண்டியை நோக்கிச் சுட்டபடி ஓடிவரத் தொடங்கினான்.

ஆபத்து. அதுவும் மிக அருகில்.

மன்னரின் வாகனம் மின்னல் வேகத்தில் வேறொரு பாதையில் திரும்பி ஓடத் தொடங்கியது.

அங்கே அடுத்தவன் தயாராக இருந்தான். வண்டி வருவதைப் பார்த்ததுமே வெடிகுண்டுகளை வீசத் தொடங்கினான். குறி தவறாத தாக்குதல் அது. சூழ்ந்த புகை மண்டலத்துக்கு நடுவே மன்னர் உடல் கருகி விழுந்தார். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சில மணிநேரங்கள் கழிந்த பிறகுதான் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது என்றாலும், தலத்திலேயே அவர் பிராணனை விட்டுவிட்டதாகத்தான் நம்பவேண்டியிருக்கிறது. தாக்குதல் அப்படிப்பட்டது.

ரஷ்யாவை மட்டுமல்ல; உலகத்தையே ஓர் உலுக்கு உலுக்கிய மாபெரும் படுகொலைச் சம்பவம் இது. சரித்திரத்தில் முன்னெப்போதும் இப்படியொரு சம்பவம் நடந்ததில்லை. நவீன உலகம் சந்தித்த முதல் தீவிரவாதத் தாக்குதல். தனி மனிதத் தாக்குதல். பின்னால் நடக்கவிருந்த ரஷ்யப் புரட்சிக்கு, இதுதான் முதல் வித்து. ஒத்த கருத்துள்ள சில தனி மனிதர்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட்டால், அரசுகளுக்கு எதிரான கலகங்களைத் திறம்பட நடத்தி வெற்றி காணமுடியும் என்று உலகுக்கு உரக்க அறிவித்த சம்பவமும் கூட.

இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. Narodnaya Volya குழுவின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர் அலெக்சாண்டர் உல்யனோவ். இரண்டாம் அலெக்சாண்டரைக் கொல்வதற்கு ஏகப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு தோற்றவர் இவர். அந்தத் தோல்வியை, அவருக்கு அடுத்துப் பதவியேற்ற மூன்றாம் அலெக்சாண்டரைக் கொல்ல முயற்சி மேற்கொண்டு தீர்த்துக்கொள்ளப் பார்த்து, அதிலும் படுதோல்வி கண்டு, கைது செய்யப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளானவர்.

தமது 22-வது வயதிலேயே தூக்கிலிடப்பட்டு இறந்த இவரது தம்பிதான், பின்னாளில் ரஷ்யாவில் மன்னராட்சி ஒழியவும் மக்கள் புரட்சி மாபெரும் வெற்றி காணவும் காரணமாக விளங்கிய விளாடிமிர் லெனின். அண்ணனின் புரட்சி நடவடிக்கைகள் கண்ட தோல்விதான், தம்பிக்கு முதல் பாடமானது. புரட்சிக்குத் தேவை துணிச்சல் மட்டுமல்ல; திறமையும் கூட என்பதை லெனின் கற்றுக்கொண்டது அந்த மரணச் சம்பவத்தின்போதுதான்!

தீவிரவாதம் என்கிற எதிர்வழி தோன்றி சரியாக 125 ஆண்டுகள் முடிவடைந்துவிட்ட நிலையில், இன்றைக்கு இது பெற்றிருக்கும் பரிணாம வளர்ச்சியைப் பார்த்தால் வியப்பும் அச்சமும் ஒருசேர உண்டாகிறது.

நாட்டுத்துப்பாக்கிகள் இருந்த இடத்தை ஏ.கே. நாற்பத்தியேழுகள் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டன. கையெறி குண்டுகளின் காலம் கண்ணி வெடிகளால் களவாடப்பட்டுவிட்டன. அல் காயிதாவிடம் அணுகுண்டு இருக்குமா, ஹெஸ்புல்லாவிடம் ராக்கெட்டுகள் இருக்குமா என்று அமெரிக்க உளவுத்துறை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறது. ஹமாஸ் அரசியலில் இறங்குகிறது. எல்.டி.டி.ஈ. பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகள் விதிக்கிறது. ஈராக் தீவிரவாதிகள் தினசரி ஓரிடத்தை வெடிவைத்துத் தகர்த்துவிட்டுத்தான் பல் தேய்க்கவே போகிறார்கள். ஏதாவது ஒரு பயங்கரச் சம்பவம் நிகழாத நாளே இல்லை என்றாகிவிட்டது. கேட்டுப்பாருங்கள்? இவையெல்லாம் அடக்குமுறைக்கு எதிரான செயல்பாடுகள். மேலாதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள். விடுதலைக்கான போராட்டம். இதைத்தான் சொல்கிறார்கள். இப்படித்தான் நியாயப்படுத்துகிறார்கள்.

விளைவுகளை அவர்கள் ஒருபோதும் பொருட்படுத்துவதில்லை. மரணம். அழிவு. சர்வநாசம். ஆனால், அவசியம் வேண்டும் விடுதலை!

என்ன நடக்கிறது? யார் இவர்கள்? எங்கெல்லாம் பரவியிருக்கிறார்கள்? எப்படிச் செயல்படுகிறார்கள்? இவர்களது நெட் ஒர்க் பலம் எப்படிப்பட்டது? லட்சக்கணக்கில் ஆள் பலம் கொண்ட அமெரிக்காவுக்கு அதிகபட்சம் இரண்டாயிரம் வீரர்களை வைத்துக்கொண்டு ஒசாமா பின்லேடனால் எப்படித் தண்ணி காட்டமுடிகிறது? ஜமா இஸ்லாமியா என்றால், கிழக்காசியத் தலைவர்கள் அத்தனை பேரும் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு அலறி ஓடுவது எதனால்? இந்துக் கடவுளான பரமசிவனின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு ஜப்பானியத் தீவிரவாத இயக்கம் எப்படிப் பல லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெறமுடிந்தது? செச்னியாவிலும் போஸ்னியாவிலும் உஸ்பெகிஸ்தானிலும் ஈராக்கிலும் சூடானிலும், எத்தனையோ பல தென்னமெரிக்க நாடுகளிலும் பாகிஸ்தானிலும் ஆப்கனிஸ்தானிலும் அரசுகளுக்குச் சமமாக இத்தகைய தீவிரவாத இயக்கங்களுக்கு முக்கியத்துவம் கிடைப்பது எதனால்?

இன்றைக்கு உலகை உலுக்கும் மாபெரும் பிரச்னைகளுள் அதிமுக்கியமானது இது. விளையாட்டே இல்லை. விலாவாரியாகப் பார்த்தே ஆகவேண்டும்!